Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 06 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 04 ( 18 - 06 - 1991 ) செவ்வாய்க்கிழமை ஓசை: 120

Mr. Kodis Moran

## இன்று ஆசிரியர் பேரணி

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் ஆசிரியர்களும் பொதுமக்களும் பாதிக்கப்பட்டுள்ளதையும் இராணுவத்திடம் சிக்கியுள்ள ஆசிரியர்களை விடுவிக்கக் கோரியும் இன்று மாபெரும் பேரணி ஒன்றை கோப்பாய், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆசிரியர்கள் இணைந்து நடாத்துகின்றனர்.

காலை 9-00 மணிக்கு திருநெல்வேலியிலுள்ள பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் இருந்து ஆரம்பிக்கும் இப்பேரணி (6ஆம் பக்கம்பார்க்க)

# காங்கிரஸ் அரசமைக்க முயற்சி;

# புதிய பிரதமர் நரசிம்மராவ்?



(நமது நிருபர்)

அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத பட்சத்திலும் தோழமைக் கட்சிகளுடன் சேர்ந்து புதிய சிறுபான்மை அரசொன்றை அமைப்பதற்கு காங்கிரஸ் கட்சி முயற்சிக்கும் அதேவேளை இந்தியாவின் புதிய பிரதமராக நரசிம்மராவ் தெரிவுசெய்யப்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாகவும் அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள்.

தற்பொழுது வெளிவந்து கொண்டிருக்கும் தேர்தல் முடிவுகளின் போக்கின்படி அறுதிப் பெரும்பான்மையை காங்கிரஸ் கட்சி பெறுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாக உள்ளதாகத் தெரிகின்றது. தோழமைக் கட்சிகளுடன் கூட்டுச் சேரினும் அறுதிப் பெரும்பான்மைக்கு சுமார் இருபது ஆசனங்கள் குறைவாகக் கிடைக்கும் எனத் தெரியவருகின்றது.

மேற்கு வங்காள மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைக்க தான் உத

(6ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக முதலமைச்சராக செல்வி ஜெயலலிதா

(சென்னை)

தமிழ்நாட்டில் அ. இ. அ. தி. மு. க. அறுதிப் பெரும்பான்மை பெற்றதைத் தொடர்ந்து செல்வி ஜெயலலிதா தலைமையிலான அமைச்சரவை அமைக்கப்படவுள்ளது.

பர்கூர் தொகுதியில் அ. தி. மு. க பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா வெற்றி பெற்றுள்ளார். இதே தொகுதியில் போட்டியிட்ட தாயக மறுமலர்ச்சி மன்றக் கட்சித் தலைவர் ரி. ராஜேந்திரை 37, 215 வாக்கு வித்தியாசத்தில் ஜெயலலிதா வெற்றி பெற்றார்.

ஜெயலலிதாவிற்கு 67,650



வாக்குகளும், ரி. ராஜேந்தி

(4ஆம் பக்கம் பார்க்க)

அனுராதபுர மாவட்டத்தில்

## புலிகளின் தாக்குதலுக்கு 5 படை பலி; ஆயுதங்கள் மீட்பு

(அனுராதபுரம்)

அனுராதபுர மாவட்டத்தில் இராணுவ வாகனமொன்றில் வந்த சிறிலங்கா இராணுவத்தின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டதில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இச்சம்பவம் நேற்றைய தினம் காலை 8 மணியளவில் பவன்கடவை என்னுமிடத்தில் நடந்துள்ளது. இப்பகுதியிலுள்ள இரண்டு இராணுவ முகாம்களுக்கும் இடையில் ட்ரக் வண்டியொன்றில் வந்து கொண்டிருந்த இராணுவத்தினர் மீதே மேற்படி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத் தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து

- ★ ரீ 56 II ரகத்துப்பாக்கி -2
- ★ ரீ 56 1 ரகத்துப்பாக்கி -01
- ★ அஸ்ற்றரிய ரவைக் கூடுகள் -07
- ★ ரீ 81 ரகத்துப்பாக்கி -01

(6ஆம் பக்கம் பார்க்க)

பிராமனாலங்குளம்

## ஹெலி சுட்டு வீழ்த்தப்பட்டது சடலங்கள் ஆயுதங்கள் மீட்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலின்போது சிறிலங்கா இராணுவத்தினருக்கு துணையாக தாக்குதலில் ஈடுபட்ட உலங்கு வானூர்தி ஒன்று புலிகளால் சுட்டுவீழ்த்தப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் நான்கு இராணுவத்தினரின் சடலங்களும், ஆயுதங்களும் புலிகளினால் கைப்பற்றப்பட்டன.

செட்டிகுளம் இராணுவ முகாமில் இருந்து வெளியேறி வந்த இராணுவத்தினருடன் மூன்றாம்தானாகத் (6ம் ப.பா)

## வீரவணக்கம்

### செக்கடி புலவில் நால்வர்

வவுனியா செக்கடிப்புலவில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினருடன் நேற்றுக்காலை ஏற்பட்ட மோதலில் லெப் சுதா (நாகேந்திரன் கோவில்குளம் வவுனியா) 2ஆவது லெப்ரா மன் (பவன் கிருஸ்ணமூர்த்தி அரசன் குளம் ஓமந்தை) குணாளன் (சுந்தரம ரஞ்சந்திரன் மடுக்குளம் வவுனியா) கபில்ராஜ் (இராமசாமி ஜோன் ஜெகப் ஜஸ்ரின் 4ம் யூனிற் பாவற்குளம ஆகியோர் வீரமரணத்தைத்தழுவிக் கொண்டனர்.

### ஆனையிறவில் வக்கி

ஆனையிறவு இராணுவத்தினருடன் நேற்று முன்தினம் காலை 6.30 மணியளவில் ஏற்பட்ட மோதலில் வீரவேங்கை விக்கி ( தியாகராஜா உதயராஜா ஸ்கந்தபுரம் கிளிநொச்சி என்பவர் வீரமரணத்தைத் தழுவியுள்ளார்.

### பூவரசங்குளத்தில் பிரேமன், றாஜின்

பூவரசங் குளத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் பிரேமன் (திசைவீரசிங்கம் தவேந்திரன் கனகராயன் குளம், வவுனியா, றாஜின் (பொன்னுத்துரை கிரிதரன நாவற்குழி கைதடி) ஆகியோர் வீரமரணமடைந்துள்ளனர் இவர்களுக்குவிடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## இராணுவம் மீது புலிகள் செக்கடிப்புலவில் தாக்கு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இராணுவ தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் தரப்பில் நான்கு போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை (6ஆம் பக்கம் பார்க்க)

## பிராமனாலங்குள மோதல்; 11 புலிகள் வீரமரணம்

### தீவிர ஆதரவாளர் ஒருவரும் வீரமரணம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் பிரமனாலங்குளம் என்னும் இடத்தில் இருந்து மடுபகமாக முன்னேறி வந்த இராணுவத்தினருடன் நேற்றுமுன்னம் காலை 8-30 மணியளவில் ஏற்பட்ட மோதலில் பதினொரு வீரவேங்கைகளும் தீவிர ஆதரவாளர் ஒருவரும் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டனர்.

அவர்களின் பெயர் விபரம் (6ஆம் பக்கம் பார்க்க)



முத்தமிழ் விழா இறுதிநாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், யாழ். மாவட்டத் தளபதி தினேஷ் ஆகியோரையும், விழாவில் மேடையேற்றப்பட்ட 'உயிர்த்து வந்த மனிதர் கூத்து' என்னும் நாடகத்தின் ஒரு காட்சியையும் படத்தில் காணலாம்.

### பெரும்பான்மை கிடைக்காவிடில்

## உத்தி பற்றி ஆராய காங்கிரஸ்குழு கூடும்

(டில்லி)

பெரும்பான்மை வலு தமது கட்சிக்கு கிடைக்காவிடில் தமது கட்சியின் உத்தி பற்றி ஆராய இந்திரா காங்கிரஸ் நிர்வாகக்குழு மிக விரைவில் கூடும் என பிரணப்முகர்ஜி தெரிவித்துள்ளார். ஆனால் பாரதிய ஜனதாக் கட்சியுடன் சேர்ந்து கூட்டு அரசாங்கம் அமைக்கமாட்டோம் எனவும் தெரிவித்தார்.

**பிரணப் முகர்ஜி**

இதே நேரம் ஜனதாதளக் கட்சி, இந்திரா காங்கிரசுடன் கூட்டுச்சேர்ந்து அரசு அமைக்க மறுப்புத் தெரிவிக்காது என்று அஜித் சிங் தெரிவித்துள்ளார்.

இதே நேரம் சி.பி.ஐ இந்திரா காங்கிரசுடன் கூட்டுச் சேர மறுக்காது என மேற்கு வங்க முன்னாள் முதலமைச்சர் ஜோதி பாசு தெரிவித்துள்ளார்.

## தாமரைக்கனி வெற்றி

(சென்னை)

சிறிவல்லிபுத்தூர் சட்டப் பேரவைத் தொகுதியில் தாமரைக் கனி வெற்றி பெற்றுள்ளார். அ.இ.அ.தி.மு.கழகத்தின் சார்பில் சென்ற முறை வேட்பாளராக நின்ற இவர் இம்முறை சுயேட்சையாக நின்று வெற்றி பெற்றுள்ளார்.

செல்வி ஜெயலலிதாவுடன் தொகுதி வாரியான உடன்பாடு ஏற்படாததாலேயே இவர் சுயேட்சையாக நின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. கே.கே.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அவர்களுக்கு "அசிட்" வீசிய தொடர்பாக இவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டது குறிப்பிடத்தக்கது.

## மக்கள் அஞ்சலிக்கு லெப். தவக்குமார் பூதவுடல்

(மணலாறு)

செட்டிகுளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடன் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட மோதலில் வீரமரணமடைந்த லெப்டினன்ட் தவக்குமாரின் புகழுடல் மணலாற்றில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப் பட்டது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை மணலாறு மாவட்டத்திலுள்ள செம்மலை, குமுழமுனை, அளம்பில் ஆகிய இடங்களில் வேங்கையின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட போது பெருந்திரளான மக்கள் அலையலையாக வந்து அஞ்சலி செலுத்தினர். மணலாறு மாவட்ட தளபதி அன்பு அரசியல் பொறுப்பாளர் வாகீஸ் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து அன்று மாலை மாவட்ட தலைமையகத்தில் சிலமணி நேரம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபின் மணலாறு மாவட்ட மாவீரர் மயானத்தில் கூடி நின்ற மக்கள் கதறியழ தீயுடன் பூதவுடல் சங்கமமாகியது.

## 105 வர்த்தகர் தலைமறைவு

(கொழும்பு)

வர்த்தக மோசடியில் ஈடுபட்டதாக கருதப்படும் 105 கோடீஸ்வர வர்த்தகர்கள் தலைமறைவாகியுள்ளனர் என கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

பல்வேறு மோசடியானவர்த்தகங்களில் ஈடுபட்டதாக கூறப்படும், 105 கோடீஸ்வரர்கள் தலைமறைவாகியுள்ளனர் என்றும், இவர்களை கண்டு பிடிக்கும் விசேட பொலிஸ் குழுவின் நடவடிக்கைகளில் இருந்து தப்புவதற்காக இவர்கள் மறைந்துள்ளார்கள் என்றும் கொழும்புப் பொலிஸார் கருதுவதாகவும் அந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன.

---

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பூவுலகில்: 03-09 1928

பொன்னுலகில் 30-06-1990

திதி: 19-06-1991

### திருமதி கதிரவேலு சுந்தராம்பாள்

(இளைப்பாறிய ஆசிரியை)

எங்கள் அன்புத் தெய்வமே! அம்மா, உங்கள் புன்னகை தவழும் இனியமுகம் எம் கண்களில் தெரிகின்றதே உங்கள் இனிய குரல் ஓசை எம் காதுகளில் ஒலிக்கின்றதே. அம்மா, எம்மை நீங்கள் ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்று ஆண்டு ஒன்று ஆகிறது! எம்மையெல்லாம் அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வாழவைத்த தெய்வமே! எங்கள் இதயத்தில் என்றும் உங்கள் நினைவுகள் நீங்காது நிலைத்திருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றும் வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்

அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள்.

திமிரி விநாயகர் கோவில் வீதி, செட்டியகுறிச்சி, பூநரி. (B. 2683)

---

பெற்றுக் கொள்ளவும்

முற்றவெளியில் நேற்று முன்தினம் முத்தமிழ் விழாவில் கலந்துகொண்டோரால் தவறவிடப்பட்ட பத்துச் சாவிகள் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரவும் காட்டி பெற்றுக்கொள்ளலாம்.

## காங்கிரஸ் சார்பில் வெற்றியீட்டிய சிலர்

இந்திரா காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்களில்எட்வேட்பலேரோ, ஜாப்ரி, ஹெரிப், கிருஷ்ணகுமார் கித்தர் கொர்மாலோ, பல்ராம் ஜாக்கர், சிவசாமாதோன், ஜகதீஷ் ரைற்றல் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

தேர்தலில் தோற்றுப் போனவர்களில் பேராசிரியர் என்.ஜி.ரங்கா கர்நாடக முன்னாள் முதலமைச்சர் குண்டுராவ், ஜனார்த்தன் பூஜாரி, ஜானகிவலாபட் நாயக், நட்வர்சிங், வசந் காட்டேல் ஆகியோர் ஆவர்.

தோல்வியடைந்தவர்களில் விஜயகுமார் மல்கோத்திரா, சிறுகண்டகதித பொடியார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஜனதா தளக் கட்சியில் ராமகிருஷ்ண ஹெக்டே, பேராசிரியர் மது தண்டவதே, ராஜ்மோகன் காந்தி, சுவாமி அக்னிவேஷ் ஆகியோர் தோல்வி அடைந்துள்ளனர்.

## ஏழாலை மீது ஷெல்தாக்கு; வயோதிபர் படுகாயம்

கட்டுவன் சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நேற்று முன் தினம் இரவு 7 மணியளவில் மக்கள் குடியிருப்பு பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

ஏழாலைப் பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் வேலுப்பிள்ளை கதிர்த்தம்பி (வயது 76) என்பவர் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பளை அரசினர் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். இவரது வீடும்பலத்த சேதத்திற்குள்ளாகியது. (ச)

---

நினைவு கூருகின்றோம்...



**1991 - 06 - 18**

மேஜர் **தயாபரன்**

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் தமிழீழ கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினருடன் ஏற்பட்ட மோதலின்போது வீரமரணமெய்திய

**லெப்.ரவியப்பா** (சோதிலிங்கம் யோகலிங்கம் - திருவில் வல்வெட்டித்துறை)

**2ஆம்லெப்.மணிமாறன்** (கதிரப்பிள்ளை பாலசுப்பிரமணியம் - வல்வெட்டித்துறை)

**2ஆம்லெப்.ஆனந்தப்பா** (கந்தசாமி சண்முகானந்தன் - காட்டுப்புலம், வல்வெட்டித்துறை)

**2ஆம்லெப்.ரஹீம்மாஸ்டர்** (தம்பையா கிருஷ்ணமூர்த்தி - வல்வெட்டித்துறை)

**சித்தப்பா** (சின்னத்துரை கணேசதாஸன் - அராலிமேற்கு, வட்டுக்கோட்டை)

**சேரன்** (சரவணமுத்து சிறீசர்வானந்தா - திருவில், வல்வெட்டித்துறை)

**தேவராஜ்** (இன்ஸன்ட் சில்வெஸ்டர் ஆனந்த லம்பேர்ட் - பெரியபண்டிவிரிச்சான்)

**ஷியாம்** (அந்தோனிப்பிள்ளை யேசுராசா - பருத்தித்துறை)

**சூரி** (வேலுப்பிள்ளை ரவி - அரசர்கேணி, பளை)

**விசாகன்** (கல்லடி, மட்டக்களப்பு)

**பிக்கப்ரவி** (ரவி - வல்வெட்டித்துறை)

**2ஆம்லெப். அலிப்** (சிறீ பாஸ்கரன் - வல்வெட்டித்துறை)

**ஞானி** (க. கஜேந்திரமூர்த்தி - வல்வெட்டித்துறை)

உப்பு வெளியில் சிறிலங்காப் படையினரின் முற்றுகையின் போது வீரமரணமடைந்த

**லெப்.கார்த்திக்** (ஐயாத்துரை சிறீதரன் - சம்பூர்)

1989ஆம் ஆண்டு கொல்லங்கலட்டியில் தேசவிரோதிகளின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியான பொதுமகன்

இராசாவின் தோட்டம் பகுதியில் தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட புங்கன்குளத்தைச் சேர்ந்த இளம்பெண்

1990ஆம் ஆண்டு வவுனியா வைரவப்புளியங்குளப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்டநேரடி மோதலில் வீரமரணமடைந்த வவுனியா மாவட்டப் பொறுப்பாளர்

**மேஜர் தயாபரன்** (கனகசபை சிறீதரன் - இராசேந்திரன்குளம், வவுனியா)

சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதல்களில் வீரமரணமடைந்த

**இளங்கோ** (திருக்கோணமலை)

**மஜீத்** (மட்டக்களப்பு)

**ஜினேந்திரன்** (இருதயபுரம்)

திருமலை 13ஆம் கட்டையில் சிறிலங்கா இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டினால் உயிரிழந்த இருபொது மக்கள்

திருமலை சினன்குடாப் பகுதியில் சிறிலங்காப்படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 80க்கு மேற்பட்ட பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B/ 2687)

ஆண்டுதோறும்

# சித்திரைப் பெரு விழாவாக

# முத்தமிழ் விழா நடாத்தப்படும்

அன்பார்ந்த தமிழீழ மக்களே!

ஒன்பது நாட்களாக சீரோடும் சிறப்புடனும் எழுச்சியுடனும் நடைபெற்ற முத்தமிழ் விழா இன்று பத்தாவது நாளாக மக்கள் திரளின் பேரெழுச்சியுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த முத்தமிழ் விழாவை வெறும் பொழுதுபோக்கிற்கான கலை விழாவாக நாம் கொண்டாடவில்லை. எமது தமிழீழ மண்ணை மீட்கும் போராட்டம் வீறுகொள்ள வைப்பது, எமது மொழியை பிறமொழி ஊடுருவல்களிலிருந்து பாதுகாப்பது, எமது கலை பண்பாடுகளைப் பேணிப் பாதுகாப்பது, எமது கலைஞர்களையும் இலக்கியவாதிகளையும் ஊக்குவித்து புதிய புரட்சி இலக்கியங்களை - எழுச்சிக் காவியங்களை உருவாக்க உழைப்பது இவை போன்ற உன்னத நோக்கங்களுக்காகவே விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினராகிய நாங்கள் முத்தமிழ் விழாவை நடாத்திக் கொண்டிருக்கிறோம்

பாட்டுக் கழகத்தின் சார்பில் சிறந்த எழுத்தாளர்கள், கலைஞர்கள், பாவலர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு மதிப்பளித்து ஊக்குவிக்கும் முகமாக சிறுகதை, நாவல், பாடல், கிராமியக் கலைகள் கூத்துக்கள் போன்றவற்றிற்கான போட்டிகள் நடாத்தி பரிசுகள் வழங்கப்படும்.

அத்துடன் எம் அருந்தமிழ் மொழியை மாற்றுமொழி ஊடுருவல்களிலிருந்து பாதுகாத்து எங்கும், எதிலும் தூய தமிழ்மொழியை நாம் பயன்படுத்த விழைகின்றோம்.

இதன் முதற்படியாக காலோசிதமாக எமது கலை, கலாசாரப் பிரிவை கலை, பண்பாட்டுக் கழகமென மாற்றியமைத்துள்ளோம். கலை, பண்பாட்டுத்துறை எமது இயக்கத்தின் ஒருபிரிவு என்று கூறுவதைவிட எமது இயக்கத்தின் அனைத்துத் துறையினரதும் பங்களிப்புக்களும், படைப்புகளும் அதற்குத் தேவை என்ற நிலையில் கலை, பண்பாட்டுத் துறையை எமது இயக்கத்துக்கு ஒரு பிரிவாக அல்லாது

பட வேண்டும்.

அன்னைத் தமிழுக்கு அரியணையில் இடம் கிடைக்கவில்லை என்பதனாலேயே எமது மொழியுரிமைப் போராட்டம் முதலில் முகிழ்த்தெழுந்தது. அந்தப் போராட்டம் பெருவளர்ச்சி கண்டு ஆயுதப் போராக விடுதலைப் போராக மாறி இன்று நாம் தமிழீழ மண்ணை மீட்டு எமது மொழியை அரியணையில் ஏற்றும் நாளை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். விரைவில் எமது மொழியை அரியணையில் ஏற்றுவோம் இதில் ஐயமில்லை.

ஆனால் அரியணையில் ஏற்றப்படும் அந்த மொழி, எம் தமிழ் மொழியாக இருக்குமா என்பதில் எமக்குப் பேரையம் ஏற்படுகிறது. வழிபாட்டு மொழியாக வடமொழியையும், இசை மொழியாக தெலுங்கையும், நீதிமன்ற மொழியாக ஆங்கிலத்தையும் நீண்ட காலமாக ஏற்று வந்திருக்கும் நாம் எமது மொழிச் சொற்கள் எவை எமது மொழியில் கலந்துவிட்ட பிறமொழிச் சொற்கள் எவை என்பதை வேறுபடுத்தி அறிய முடியாது அல்லலுறுகின்றோம். நாம் தற்போது பேசுகின்ற மொழியை அரியணையில் ஏற்றினால் இருபது விழுக்காடு தமிழ் மொழியையும் எண்பது விழுக்காடு மற்றைய மொழிகளையும் அரியணையில் ஏற்றுகின்றோம் என்றுதான் பொருளாகும்.

எனவே எமது தமிழன்னையை குற்றுயிரும் குறையுயிருமாகத்தான் நாம் அரியணையில் ஏற்றப்போகின்றோமா?

முத்தமிழ் விழா நடத்தும் வேளையில் நாமெல்லாம் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி இது. எனவே தமிழீழ மீட்புப் போரில் நாம் முழு வெற்றி காணும் நாளில் எமது மொழியை மாற்று மொழிக் கலப்புகளிலிருந்து - ஊடுருவல்களிலிருந்து வேறுபடுத்தும் மொழிமீட்புப் போரிலும் நாம் வெற்றி கண்டாக வேண்டும்.

இந்நிலையில் மண்மீட்புப் போருக்கு வீறூட்டும் வகையிலான இலக்கியங்களையும் கலைப்படைப்புக்களையும் எமது எழுத்தாளர்கள், கலைஞர்கள் வழங்க முன்வர வேண்டும். அது எமது எழுத்தாளர்கள் - கலைஞர்களின் கடமையாகும், எமக்கு இன்று தேவையானது விடுதலை இலக்கை நோக்கிய இலக்கியங்களும், கலைப்படைப்புகளுமே தவிர வெறும் பொழுதுபோக்குக் கலைகளும் இலக்கியங்களுமல்ல. எழுத்தாளர்கள் இலக்கற்ற இலக்கியங்கள் படைப்பதைவிட்டு புரட்சிகர போராட்ட உணர்வை வெளிப்படுத்தக்கூடிய எழுச்சி இலக்கியங்களை - காலத்தால் அழியாத காவியங்களை படைக்க முன்வர வேண்டும். அதுபோன்றே பாவலர்களும் தமிழினத்திற்கு எழுச்சியூட்டக் கூடிய பாடல்களை ஆக்க வேண்டும், பாட வேண்டும். கலைஞர்கள் எமது உயிரினும் மேலான விடுதலைப் போரை வெற்றியின் திசைவழி நோக்கி இட்டுச் செல்லக் கூடிய கலைப்படைப்புக்களை ஆக்க வேண்டும் தமிழீழத்தின் முழுமையான விடுதலை நோக்கிய பாதையில் போராளிகளுடன் கலைஞர்கள் எழுத்தாளர்கள், அறிஞர்கள், உட்பட அனைத்துத் தமிழீழ மக்களும் அணிதிரண்டு விடுதலை நோக்கிய வழி நடப்போம்: 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

**முத்தமிழ் விழா இறுதி நாளன்று விடுதலைப் புலிகள் பண்பாட்டுக் கழகத்தால் விடுக்கப்பட்ட பிரகடனம் முழுமையாக இங்கு பிரசுரிக்கப்படுகிறது.**

1. இந்த முத்தமிழ் விழா இனிமேல் ஆண்டுதோறும் சித்திரைப் பெருவிழாவாக பத்து நாட்கள் நடாத்தப்பட இருக்கிறது. இம்முறை யாழ். குடாநாட்டில் நடைபெற்ற இந்த முத்தமிழ் விழா அடுத்துவரும் ஆண்டுகளில் வன்னி, திருமலை, மன்னார், மட்டக்களப்பு என தமிழீழத்தின் சகல பகுதிகளிலும் கொண்டாட வேண்டுமென்று விரும்புகின்றோம்.

2. ஆண்டுதோறும் முத்தமிழ் விழாவின்போது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினால் தமிழீழ மக்களுக்காகவும், மண்ணுக்காகவும் பணிபுரிந்த மாமனிதர்கள் பதின்மரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குத் தமிழீழத் தேசிய விருது வழங்கப்படும். சிங்கள அரசு எமது கலைஞர்கள், எழுத்தாளர்களைப் புறக்கணித்து ஒதுக்கிவரும் வேளையில் தாயகமீட்புப்போரை நடாத்திக் கொண்டிருக்கும் எமது இயக்கம் ஒரு அரசாக அமையாவிட்டாலும்கூட ஒரு அரசு தன்னாட்டுக் கலைஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் எந்தெந்த வகையில் ஊக்கமும் உதவியும் செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் எமது எழுத்தாளர்களுக்கும் கலைஞர்களுக்கும் கிடைக்கச் செய்வதற்கு எமது இயக்கம் முயற்சிக்கும். சிங்கள அரசினால் பல்லாண்டு காலமாக ஒதுக்கப்பட்டு-புறக்கணிக்கப்பட்டு வரும் எமது கலைஞர்கள், எழுத்தாளர்கள் போன்றோர்க்கு உதவியளித்து அவர்களை ஊக்குவிக்கும் வகையில் எமது கலை, பண்பாட்டுக்கழகம் பல திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்தும். சிற்ப ஓவியக் கலைஞர்களுக்கென சிற்ப ஓவியக் கூடங்களும், தமிழ் கூத்துக் கலைஞர்களுக்கென கூத்துப் பட்டறையும் இசைக் கலைஞர்களுக்கென ஒரு ஒலிப்பதிவுக் கூடத்தையும் அமைத்து எமது கழகம் ஊக்குவிக்க உள்ளது. எழுத்தாளர்கள், கவிஞர்களின் ஆக்கங்களை வெளிக்கொணரும் பொருட்டு விரைவில் ஒரு இலக்கிய இதழை எமது கழகம் வெளியிட உள்ளது எமது விடுதலைப்புலிகள் கலை, பண்

முழுமையாக ஆக்குவது அழைப்பது சிறப்பானது-பொருள் உள்ளது என நாம் எண்ணியதனால் இதுவரை கலை, கலாசாரப் பிரிவு என நாம் அழைத்து வந்ததை அதிலிருந்த கலாசாரத்தை தூய தமிழ்ப் பண்பாடாக்கி, பிரிவைக் கழகமாக்கி கலை, பண்பாட்டுக்கழகமாக மாற்றியமைத்துள்ளோம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மொழிக்குள் புகுந்து கலந்திருக்கும் மாற்று மொழிச் சொற்களை கண்டறிந்து களைவது என்பது அத்தனை இலகுவான செயலல்ல அது தனிமனித முயற்சியினால் நிறைவேற்றப்படக் கூடிய செயலுமல்ல என்பதை நாம் நன்கு அறிவோம்.

எனவே தமிழ் மொழியைத் தூய்மைப்படுத்த தமிழ் மக்களாகிய நாம் தமிழியக்கம் கண்டாக வேண்டும் அந்தத் தமிழியக்கம் பல்வேறு மட்டங்களிலும் விரைந்து செயற்பட்டாக வேண்டும். தமிழ் மொழியைத் தூய்மைப்படுத்தும் கோட்பாட்டைக் கொண்ட ஒரு தனித்தமிழ் இயக்கத்தை தமிழகத்தில் தமிழ்க்கடல் திரு.வி.க. மறைமலையடிகள், தேவநேயப்பாவாணர் பாரதிதாசன் போன்றோர்கள் கண்ட தமிழியக்கம் போன்ற தமிழியக்கத்தை அனைத்துத்துறை சார்ந்த அறிஞர்களை உள்ளடக்கியதாக நாம் தோற்றுவிக்க வேண்டும்.

அந்தத் தமிழியக்கம் தமிழ் மொழியைத் தூய்மைப்படுத்த அனைத்து வழிவகைகளையும் கண்டறிந்து செயற்பட வேண்டும். பல்கலைக்கழக மட்டத்தில் தமிழ் மொழியைத் தூய்மைப்படுத்துவதற்கென ஒரு தனித்துறை தோற்றுவிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும்.

நாம் பயன்படுத்தும் வேற்று மொழிச் சொற்களுக்கு எம் மொழியிற் சொற்கள் இல்லாதவிடத்து ஏற்ற மாற்றுச் சொற்களை தமிழிற் தோற்றுவிப்பதற்கென தமிழறிஞர்களையும் மாற்றப்பட வேண்டிய சொற்களை அறிய துறை சார்ந்த வல்லுநர்களைக் கொண்ட குழுக்கள் துறைதோறும் அமைக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைமுறைப்படுத்தப்

## ஆயுர்வேத வை. சாலையில் மருந்துத் தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் இயங்கிவரும் சித்த ஆயுர்வேத இலவச வைத்திய சாலைகளில் தற்போது மருந்துகளுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக இலவச சேவையையே நம்பியிருந்த அனேக ஏழை மக்கள் நோயுடன் மருந்தும் இல்லாது கஷ்டப்படவேண்டியுள்ளது.

வடக்குக்கிழக்கு மாகாண சபையிலிருந்து இங்கு வந்து சேர வேண்டிய ஆயுர்வேத மருந்து வகைகள் வந்துசேராததால் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

நோயாளர்களுக்குத் தற்போது வழங்கப்படும் மருந்துகள் உள்ளூர் சந்தைகளில் கொள்வனவு செய்யப்பட்டவையாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென்னவர்கூத்தே தமிழர் கூத்தாகும்

(குருநகர்)

''சிலப்பதிகாரத்தில் கூறப்பட்ட பல கூத்து வடிவங்களில் வடவர், தென்னவர் என்ற இரு கூத்துகள் பற்றியும் கூறப்படுகிறது.

வடவரின் கூத்தை விட்டு விடுவோம். தென்னவர் கூத்தானது தமிழர்களது கூத்தாகும் இந்தத் தென்மோடிக் கூத்தில் சகல ஆடல், பாடல்களுக்கான இலட்சணங்களும் கொண்டு மிளிர்வது கவனிக்கத்தக்க ஒன்று 16-06-91 காலை யாழ். திருமறைக் கலாமன்றம் ஏற்பாடு செய்த நாட்டுக் கூத்து கருத்தரங்கில் கலந்து உரையாற்றிய திரு. அமிர்தநாயகம் (முல்லைக்கவி) மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் பிரதான வீதி மறைக்கல்வி நிலைய மண்டபத்தில் குருமுதல்வர் எம். விக்டர் (யாழ் ஜேம்ஸ்) தலைமையில் கருத்தரங்கு ஆரம்பமானது.

தொடர்ந்து பேசிய முல்லைக்கவி கூறியதாவது.

''தமிழர்களின் செந்நெறி ஆட்டக் கூத்து முறையின் தோற்றம், வளர்ச்சி என்பன போன்றவற்றைச் செய்த மக்கள் சமுதாயம் கீழ்மட்ட மக்களாக இருப்பதை ஈழம், தமிழகம் போன்ற இடங்களை ஆதாரமாகக் கொண்டு பார்க்கையில் அறியக் கூடியதாக இருக்கிறது.

இந்நாட்டுக் கூத்துக் கலையை வெறும் கூத்து என்ற நோக்கில் கூத்தைக் குழப்ப முனைவது வேதனைக்குரியதாகும்.'' (21)

## ஜெயலலிதா பற்றிய சில குறிப்புக்கள்

தமிழகச் சட்டசபைத் தேர்தலில் பெருவெற்றியீட்டி முதல்வர் பதவிக்கு வருவாரென எதிர்பார்க்கப்படும் செல்வி ஜெயலலிதா ஜெயராம் 24-02-1948 இல் பெங்களூரில் பிறந்தவராவார். இவரது தாயார் பிரபல நடிகை சந்தியா என்பவராகும். அம்மு என நண்பிகளால் அழைக்கப்படும் இவர் மெற்றிக் கல்வித் தகைமையுடையவர், நடிப்பிற்கான கலைமாமணிப் பட்டம் பெற்றவர்.

1971 அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து 82இல் கொள்கை பரப்புச் செயலாளராகவும் 84இலிருந்து 87வரை இணைத் தலைவராகவும் 87இல் முன்னைய முதல்வர் எம் ஜி இராமச்சந்திரனின் மறைவுக்குப் பின் கட்சி பிளவுபட்டபோது அதிமுக (ஜெ) அணிக்குத் தலைவராகவும் பதவி வகித்தார். அ. தி. மு. க. வானது இவரது அணியினருக்கு உரிமை என்ற நீதிமன்றத் தீர்ப்பின் பின் அ.தி.மு.க தலைவரானார்.

1983 தொடக்கம் 1988 வரை இராஜ்யசபா உறுப்பினராக பதவி வகித்த இவர் 1989 சட்டசபைத் தேர்தலில் போடிநாயக்கனூர் தொகுதியில் இவருடன் போட்டியிட்ட சகநடிகையான வெண்ணிற ஆடை நிர்மலாவை 3ஆம் இடத்திற்குத் தள்ளி 28 ஆயிரம் மேலதிக வாக்குகளால் வெற்றிபெற்று எதிர்க்கட்சித் தலைவராகும் வாய்ப்பைப் பெற்றார். எனினும் இவரது முதல்நாள் சட்டசபை பிரவேசத்தின் போது ஏற்பட்ட அவமானத்தால் சட்டசபையைப் பகிஷ்கரித்து வந்தார்.

1990இல் காரில் பிரயாணம் செய்துகொண்டிருந்த போது ஏற்பட்ட விபத்தில் மயிரிழையில் உயிர் தப்பினார்.

முன்னைநாள் திரைப்பட நட்சத்திரமாகிய இவர் எழுத்தாளரும், சிறந்த நடனதாரகையும் ஆவர்.

இவரது முதற் திரைப்படம் வெண்ணிற ஆடை ஆகும். நூற்றுக்கு மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ள இவரின் நூறாவது திரைப்படம் திருமாங்கல்யமாகும் எம் ஜி.ஆருடன் நடித்த முதற்படம் ஆயிரத்தில் ஒருவன் என்பதாகும் எம். ஜி. ஆரின் நூறாவது படமாகிய ஒளிவிளக்கின் கதாநாயகியாகிய இவர் அவருடன் கூடுதல் படங்களில் நடித்த கதாநாயகி என்ற புகழையும் பெற்றவர்.

இவரது சிறுவயது நடன அரங்கேற்றம் எம் ஜி.ஆர் தலைமையிலேயே நடைபெற்றது. மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் இவரது நடனமும் நடைபெற்றது.

எம்.ஜி. ஆரால் செல்வி என அழைக்கப்பட்ட இவர், அவர் இறந்தபோது உடன்கட்டை ஏற இருந்ததாக அறிக்கை விடுமளவுக்கு நெருக்கமான உறவைக் கொண்டிருந்தார். இதுவே கட்சியிலும் அரசியலிலும் இவரது செல்வாக்கை வளர்த்தது

# சில தேர்தல் முடிவுகள்

★ பீகாரில் ராஞ்சி லோக்சபாவுக்கு நடத்திய தேர்தலில் மத்திய உள்துறை செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் சுபோத்கான் சகாய் கட்டுப்பணத்தையே பறிகொடுக்குமள வுக்கு மிகக் குறைவான வாக்குகளைப் பெற்றுள்ளார்; இந்த தொகுதியில் பாரதீய ஜனதா கட்சி வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளார்.

★ ஹரியானாவில் துணைப் பிரதமரும், சமாஜவாதி ஜனதாக் கட்சித் தலைவருமான தேவிலால் றோக்டக் பாராளுமன்றத் தொகுதியில் தோற்றுப் போய்விட்டார். திராய் சட்டப் பேரவைத் தொகுதியிலும் தேவிலால் தோற்றுவிட்டார்

★ முன்னாள் பிரதம மந்திரியும் ஜனதா தள் வேட்பாளருமான வி. பி. சிங் பத்தேபூர் லோக் சபாத் தொகுதியில் வெற்றி பெற்றுள்ளார்.

★ காலஞ்சென்ற ராஜீவ் காந்தியின் நண்பரும். பள்ளித் தோழரும், இந்திரா காங்கிரஸ் வேட்பாளருமாகிய மணி சங்கர் ஐயர் தமிழ்நாடு மயிலாடுதுறை லோக் சபைத் தொகுதியில் வெற்றி சூட்டியுள்ளார்

★ மணிப்பூரின் முன்னாள் மணிப்பூர் முதலமைச்சரும், காங்கிரஸ் கட்சி வேட்பாளருமான ஆர். கே. ஜெயச்சந்திர சிங் லோக் சபைத் தேர்தலில் தோற்றுப்போய் விட்டார்.

★ கிருஷ்ணகிரி லோக் சபைத் தொகுதியில் தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழைப்பாடி என். ராமமூர்த்தி வெற்றி பெற்றுள்ளார்.

★ முன்னாள் மத்திய அமைச்சரும், இந்திரா காங்கிரஸ் வேட்பாளருமாகிய ப. சிதம்பரம் சிவகங்கை மக்கள் அவைத் தொகுதியில் வெற்றி பெற்றுள்ளார்

## ஹிந்தி மாநிலங்களில் காங்கிரஸ் பின்னடைவு

(டில்லி)

இந்திய தேர்தல் களத்தில் வடபகுதியில் இந்திரா காங்கிரஸ் வீழ்ச்சி நிலையை கண்டிருக்கிறது. குறிப்பாக மேற்கு வங்காளத்திலும் பீகாரிலும் உத்தரப்பிரதேசத்திலும் இந்த வீழ்ச்சி நிலை தோன்றியிருக்கிறது.

மேற்கு வங்காளத்தில் நான்காவது தடவையாக இடதுசாரிக் கட்சியும் பீகாரில் ஜனதா தளமும் உத்தர பிரதேசத்தில் பாரதீய ஜனதா தளமும் வெற்றி பெற்றிருக்கிறது. இதே வேளை ஒரிசா மாநிலத்தில் பாரதீய ஜனதா கட்சிக்கு எந்த ஒரு தொகுதியும் கிடைக்கவில்லை.

## பரீட்சைத் திணைக்களமே

## புலமைப்பரிசில் அனுமதிப் பத்திரத்தை வழங்கும்

(யாழ்ப்பாணம்)

புலமைப்பரிசில் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரங்கள் இம்முறை பரீட்சைத் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இதுவரை காலமும் யாழ் கல்வித்திணைக்களத்தாலேயே மேற்படி அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டன. இம்முறை ஆண்டு5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு முன் மொழிப் பரீட்சை ஒன்றும் நடாத்தப்படவுள்ளது

இப்பரீட்சைக்கு விரும்பும் மாணவர்கள் தோற்றலாம், இலங்கை முழுவதும் தோற்றும் மேற்படி பரீட்சார்த்திகள் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிப் பரீட்சைக்குத் தோற்றலாம். இதில் சித்தியடைவோருக்கு விசேட சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

இதனாலேயே இம் முறை இவர்களுக்கான அனுமதி அட்டைகள் கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்படவுள்ளன. மேற்படி பரீட்சை ஆவணி 4ஆம் திகதி நடைபெறவுள்ளதுதெரிந்ததே. (ச)

## “தாகத்தைத் தீர்தமிழே!”

கத்துங் கடல்முத்து கரைவந்து
 கன்னித் தமிழ்கேட்ட தாமே?
புத்திளமைக் குயில்கள் தமைமறந்து
 பொங்கி இசை பொழிந்தனவாமே?
பத்துநாள் இங்கே பரவசமாய் - நம்
 பண்டைத் தமிழ் வந்ததாமே?
நித்தமும் இத்தமிழ் நின்றாடி
 நெஞ்செல்லாம் நிறைத்தாலென்ன?

சங்கத் தமிழன் சாகவில்லை
 சரித்திரத்தை மாற்றுகிறான்!
எங்கள் அருங்கலைகள் தேயவில்லை...
 எம்மோடு சேர்ந்து வாழுதிங்கே!
பொங்குந் தமிழகம் பிறந்தவளே...
 பாரெங்கும் புகழோடு வளர்பவளே...
தங்கத் தமிழீழ விடுதலையைத்
 தாதமிழே! எம் தாகத்தைத் தீர்தமிழே!

— கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன்


## அறிவித்தல்

போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்! வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்க அனுமதி பெற்ற “க. ம. மட்டுவில் திறம் சுருட்டையே” வாங்கிப் பாவியுங்கள்.

உரிமையாளர்: செ. பரமலிங்கம்
சுருட்டு உற்பத்தியாளர்,
கரவெட்டி.
(R-1464)


## மெய்வல்லுநர் போட்டி

கச்சாய் அ. த. க. பாடசாலையின் இல்லங்களுக்கான மெய்வல்லுநர் போட்டி கடந்த புதன் கிழமை வித்தியாலய அதிபர் திரு. த. நவரத்தினராசா தலைமையில் நடைபெற்றது

பிரதம விருந்தினராக தென்மராட்சிப்பகுதி கொத்தணி அதிபர்கள், தென்மராட்சிப் பகுதி மாணவர் இயக்கப் பொறுப்பாளர் திரு. ரஞ்சன், கொடிகாமம் வட்டப்பொறுப்பாளர் திரு கோபால், கச்சாய் பொறுப்பாளர் திரு. சிவநாதி உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இப்போட்டிக்கு அப்பாடசாலை உயர்தர வகுப்பு மாணவ, மாணவியர் மத்தியஸ்தம் வகித்தனர் இப்போட்டியில் 1ஆம் இடத்தை மேஜர் சாந்தரூபன் இல்லமும், 2ஆம் இடத்தை கப்டன் கொலின்ஸ் இல்லமும் 3ஆம் இடத்தை கப்டன் வினோத் இல்லமும் தட்டிக் கொண்டன இந்த இல்லங்களுக்கு அண்மையில் வடமராட்சிப் பகுதியில் களப் புலியாகிய இந்த மூன்று மாவீரருடைய பெயர்களை அவர்களின் ஞாபகமாக சூட்டப்பட்டுள்ளது. (86

## சிறிபெரம்புதூரில் மரகதம் வெற்றி பெற்றார்

சிறிபெரம்புதூர் மக்கள் அவைத் தொகுதியில் போட்டியிட்ட இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திருமதி மரகதம் சந்திரசேகரர் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

கடந்த மாதம் 21 ஆம் திகதி இங்கு இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவது தெரிந்ததே இவர் முன்னாள் மத்திய அமைச்சரும் ஆவார்:

## தெரிவுப் பரீட்சை

காணி நிர்வாகத் திணைக்களத்தில், குடியேற்ற உத்தியோகத்தர் வெளிக்களப் போதனாசிரியர் பதவிகளுக்கான தெரிவுப்பரீட்சை இம் மாதம் 22ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்கள் தமக்குரிய பிரவேச அட்டைகளைத் திருக்கோணமலை காணி ஆணையாளர் திணைக்களத்திற்பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர் இவர்களுக்கான பிரவேச அட்டைகள் தனித்தனியே அனுப்பிவைக்கப்படமாட்டாது எனத்தெரிவிக்கப்படுகிறது. (ச)

இரவல் சிறப்புக்கு
(5ஆம் பக்கத் தொடர்ச்சி)
என்றேன்.

கண்ணுக்கு முன்பாக ஏற்பட்டிருக்கும் வளர்ச்சி என்னைப் பிரமிக்க வைக்கிறது. கொழும்பில் சாதாரணமாக சிங்களவனுக்கும் ஒரு தமிழனுக்கும் இடையே ஏதாவது தகராறு ஏற்பட்டதாக கேள்வியுற்றதுமே உடனடியாக ரயில் நிலையத்துக்கு விரைந்து யாழ்ப்பாணம் நோக்கி ஓடி வரும் ரயிலில் ஏறிவிட முண்டியடிப்பது தான் அக்கால வழக்கம். ஆனால் இப்போது அப்படி அஞ்சி நடுங்கும் நிலை மாறியிருக்கிறது தமிழர்கள் என்றால் பயந்தவர்கள் எனக் கருதிய காடையர்கள் இன்று பயம் கலந்த மரியாதையுடனேயே அணுகுகிறார்.

மேலும் ஆர் என்ன கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை. நான் காசு சம்பாதிச்சால் போதும் என்ற சுயநலமனப்பான்மையே பெரும்பாலும் அன்று மேலோச்சியது ஆனால் அந்த நிலைமைகள் மறக்கடிக்கப்பட்டு தேசிய உணர்வை மதிக்கின்ற போக்கு இன்று வளர்ந்திருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன் என்று கூறினார் அவர்.

## மக்கள் தீர்ப்பை ஏற்றுக் கொள்கிறோம்

### -முரளிமனோகர் ஜோஷி

(டில்லி)

தமது கட்சி மக்களின் தீர்ப்பை ஏற்றுக்கொள்கின்ற அதேவேளை எதிர்க்கட்சியில் பலமான நிலையில் தமது கட்சி அமரும் என்று பாரதீய ஜனதாக்கட்சி தலைவர்களில் ஒருவரான முரளி மனோகர் ஜோஷி தெரிவித்துள்ளார்.


## முக்கிய அறிவித்தல்

இலங்கா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி இறுதி வருட பரீட்சையில் தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகள் உடனடியாக புதன்கிழமை (19-6-91) அன்று கல்லூரியில் சமூகமளிக்கவும்.

மாணவர் மன்றம்
(R/1467 L. A. M. C.

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ்ப்பாணக்கிளை

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு

### அங்கத்தினர் கூட்டம்

மேற்படி கூட்டம் 22-06-1991 சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் நடைபெறும் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அங்கத்தினர் அனைவரையும் இதில் பங்குபற்றிக் கொள்ளும்படி அழைக்கின்றோம். இதில் புதிய உத்தியோகத்தர் தெரிவும் நடைபெறும்.

(B-2889) கௌரவ செயலாளர்

## ஆண் தாதியாளர் தேவை

தனியார் நிறுவனமொன்றில் தாதியாகப் பணிபுரிவதற்கும், நோயாளர்களைப் பராமரிப்பதற்கும் தாதிகள் தேவை.

★ வயதெல்லை: 30 வயதுக்குமேல்
★ புதிதாக சேர்பவர்களுக்கும் பயிற்சி வழங்கப்படும்
★ நியாயமான ஊதியம் வழங்கப்படும்.
★ உடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

முகவரி:
விளம்பர இல: 121
ஈழநாதம்,
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

B-2688)

புதிய முகவரியில்

DHL WORLDWIDE EXPRESS

உலகம் முழுவதுக்குமான துரித
**தபால் சேவையை**
நாம் நடாத்தி வருகின்றோம்.
எமது புதிய முகவரியில்
உங்கள் கடிதங்களை ஒப்படையுங்கள்.

**DHL INTERNATIONAL**

C/o. COSMOS MARKETING SERVICES,
120, K. K. S. Road, JAFFNA.
(B-2685)

**சிந்தனைக்கு**

செயல் மறக்கப்படலாம்,
ஆனால், அதன் விளைவு தொடர்கிறது.
— ஓவிட்


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 18 06.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
தூபெ.எண் 05


# தி.மு.க. தப்புத்தாளமும் தப்புக்கணக்கும்

தமிழக சட்டசபைக்கான தேர்தலிலும், லோக்சபாவிற்கான தேர்தலிலும் அ.தி.மு.க.இ. காங்கிரஸ் கூட்டணி அமோக வெற்றியீட்டும் என வெளியாகிக்கொண்டிருக்கும் தேர்தல்முடிவுகள் தெரிவிக்கின்றன. தி.மு.க. தலைவரும், கலைக்கப்பட்ட சட்டசபை முதலமைச்சருமான கருணாநிதி அவர்களே தமது தொகுதியில் கடும் போட்டியின் மத்தியில் மிகவும் குறைந்த வாக்கு வித்தியாசத்திலேயே வெற்றி பெற்றுள்ளார்.

அதேவேளை இத் தேர்தல் முடிவுகள் தமிழக சட்டசபையில் ஓர் எதிர்க்கட்சி இல்லை என்ற நிலைமையினையும் உருவாக்கியுள்ளது. இந்நிலையானது தமிழக சட்டசபை வரலாற்றில் முதற்தடவை நிகழ்ந்துள்ளது. அத்தோடு தி.மு.க. கட்சியின் அரசியல் வரலாற்றில் இவ்வாறானதொரு தோல்வியை அக்கட்சி சந்திக்கவில்லை என்றே கூறலாம்.

தி.மு.கவின் இத்தோல்விக்கு பல காரணங்கள், விளக்கங்கள் கொடுப்பதற்கு பலர் முற்படக்கூடும் ஆயினும் கடந்தகால அரசியலை தி.மு.க. தப்பாக விளங்கிக் கொண்டமையும், அதன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொண்டமையுமே காரணமாகும்.

தி.மு.க. ஆட்சியைக் கைப்பற்றி ஒரு வருடத்திற்குள் (1989) நடந்த இந்திய பொதுத் தேர்தலில் ஒரு ஆசனத்தைத் தானும் தி.மு.க. கைப்பற்ற முடியாமல் போனபோது 1987 தேர்தலில் தி.மு.கவிற்கு கிடைத்த வெற்றி எதிரணிகளுக்கிடையில் இருந்த ஒற்றுமையின்மையால் ஏற்பட்டதே ஒழிய தி.மு.கவிற்கு மக்களிடம் கிடைத்த பேராதரவினால் கிடைக்கவில்லை என உறுதியாகியது.

அத்தோடு 1990 இல் தேசிய முன்னணி அரசாங்கம் மத்தியில் கவிழ்க்கப்பட்டபோது தி.மு.க. தனது நிலையில் குழப்பமடைந்தது. சந்திரசேகரின் புதிய அரசாங்கம் ராஜீவ்காந்தியின் கைப்பாவையாகச் செயற்படும் என்ற நிலை தெளிவாகத் தெரிந்திருந்தும் தமது ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்கு கருணாநிதி அமைச்சரவை சந்திரசேகரிடம் மண்டியிட்டதும், ஆட்சி அதிகாரத்தைப் பாதுகாப்பதற்காகவும், மீறிப்போனால், புதிதாக ஆட்சி அமைப்பதற்கு தேசிய முன்னணிக் கூட்டை உடைப்பதற்கும் தி.மு.க. தயாராக இருந்ததும் தி.மு.கவின் மிகவும் தவறான அரசியல் அணுகுமுறையாகும்.

தேசிய முன்னணி அரசாங்கம் கவிழ்க்கப்பட்டதை தி.மு.க உறுதியாக எதிர்த்து நின்றிருத்தல் வேண்டும். அத்தோடு தமக்கு எதிராக பொம்மை அரசாங்கமான சந்திரசேகர் அரசாங்கம் வைத்த குற்றச்சாட்டுக்களை நிரூபிக்குமாறு சவால் விட்டிருக்க வேண்டும்: அல்லது தாமாக சட்டசபையைக் கலைத்திருக்க வேண்டும். அவ்வாறு நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பின் மேற்கு வங்காள கம்யூனிஸ்ட் அரசாங்கமும், பீகார் ஜனதாதள அரசாங்கமும் தற்பொழுதும் தமது நிலையைத் தக்க வைத்துக்கொண்டதுபோல் தி.மு.கவும் தமது நிலையை ஓரளவேனும் வைத்திருக்கலாம்.

அதேவேளை, தமிழகத்தில் தி.மு.க தோல்விக்கு ராஜீவ்காந்தியின் அனுதாப அலை காரணம் என பிரதானமாக வைக்கப்படப்போகும் வாதம் பொருத்தப்பாடானது என்று ஏற்றுக்கொள்ள முடியாது ஏனெனில் ராஜீவின் அனுதாப அலையானது அவரது சொந்த மாநிலமான உத்தரப்பிரதேசத்திலோ அன்றி ஹிந்தி பேசும் மாநிலங்களிலோ பெரியளவில் தாக்கத்தை ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. உத்தரப் பிரதேசத்தில் இ. காங்கிரஸ் மூன்றாவது நிலையில் இருப்பதாகவும், அடுத்த பெரிய மாநிலங்களிலும் அதே நிலையில்தான் தொடர்வதாகவும் முடிவுகள் தெரிவிக்கின்றன. மேலும் தமிழ் நாட்டின் அண்டை மாநிலமான ஆந்திராவிலும் கடந்த மக்களவை தேர்தலில் படுதோல்வி அடைந்த என்.ரி. ராமராவின் தெலுங்கு தேசம் கட்சி இம்முறை காங்கிரசைப் பின்னடையச் செய்யும் நிலையில் உள்ளது.

மேலும், தி.மு.க. தலைமை தன்நம்பிக்கையுடன் செயற்படவில்லை. எம்.ஜி.ஆர். உருவாக்கிய கட்சியுடன் எதிர்த்துப் போட்டியிட்ட தி.மு.க. எம்.ஜி.ஆரின் படத்தை வைத்து வாக்கு வேட்டையில் இறங்கியுள்ளதென்றால் அக்கட்சி எந்தளவிற்குத் தன்னம்பிக்கை இழந்திருந்தது என்பது தெரியவரும்.

இந்நிலையில் தி.மு.கவினர் தோல்வியைத்தாமே தேடிக்கொண்டனர் என்றே சொல்லுதல் வேண்டும். கொள்கைகள் அற்று ஆட்சியைப் பாதுகாத்துக்கொண்டால் போதும் என்று தன்னம்பிக்கை இழந்த நிலையில் தி.மு.க. செயற்பட்டமையும், அரசியலின் நிகழ்கால நடப்புக்களையும், எதிர்கால நிகழ்வுகளையும் தப்பாக மதிப்பீடு செய்தமையுமே அவர்கள் தோல்விக்குக் காரணமாகும்.

# இரவல்சிரிப்புக்கு ஏங்கும் நிலைமாற..

## - சிரித்திரன் சுந்தருடன் ஒரு சந்திப்பு

சிரிப்புக்கும், சிந்தனைக்கும் விருந்துபடைக்கும் திரு. சிவஞானசுந்தரம் அவர்களை நேர்காணும் முகமாக அவரது இல்லத்திற்கு சென்றேன். மாலை நேரத்தில் தமது வரவேற்பறையில்மேசையிலிருந்து இடது கையால் எழுதப் பழகிக்கொண்டிருந்தார். பெரிய எழுத்துக்களால் வெள்ளைப் பேப்பர்த் தாள்களை அவர் நிரைப்படுத்திப் பார்க்கும் போது விடாமுயற்சியையும், தன்னம்பிக்கையையும்எண்ணி கண்ணில் ஈரக்கசிவு ஏற்பட்டது எனக்கு. 'சிரித்திரு' என்பதையே தனது மூலாதாரமாகக் கொண்ட சிரித்திரன் சுந்தர் அவர்களின் சலியாத உழைப்பு என்பதன் எடுத்துக்காட்டே 'சிரித்திரன்' இதழின் தொடர்ச்சியான வெளியீடாகும். ஏற்கனவே பலமுறை சந்தித்து நன்கு அறிமுகமானவரானாலும் 'ஈழநாதத்தின் சார்பாக சந்திக்க வந்திருக்கிறேன்' எனக் கூறியதும் 'என்ன கேட்கப் போறீர்' என்று எனக்கு அனுமதி அளித்தார். ஆரம்பத்தில் பத்திரிகை வெளியிட வேண்டும் என்ற ஆர்வத்தை தங்களுக்கு ஏற்படுத்திய காரணி என்ன? அதாவது பத்திரிகை வெளியீடு என்னும் எண்ணத்தை தூண்டிய விடயம் என்ன? எனது முதலாவது கேள்விக்கு அவர் பின்வருமாறு பதிலளித்தார்.

தினகரனில் சவாரித் தம்பராக அறிமுகமாகி பின் வீரகேசரியிலும் அது தொடர்ந்தபோது கிடைத்த ஆரவாரமான வரவேற்பில் எழுந்த பூரிப்பு ஒரு காரணம்; சுதந்திரமாக ஒரு பத்திரிகை நடத்தவேண்டும் என்னும் ஆசையும் ஆவலும் இன்னுமொரு காரணம். இவற்றிற்கு மேலாக இலங்கை மக்கள் குறிப்பாக தமிழ் மக்கள் அந்நியப் பத்திரிகைகளை நம்பியிருக்கும் நிலை மாறவேண்டும். அதாவது இரவல் சிரிப்புக்கு ஏங்கும் எம்மவர் நிலை மாற்றப்பட வேண்டும் என்ற ஆவலால் உந்தப்பட்டேன். அதனால் சிரித்திரன் தொடங்கினேன்.

இலங்கையில் மட்டுமன்றி இந்தப் பூமியின் எந்தப் பகுதியிலாயினும்சரி தமிழ்மொழியில் கருத்துப்படம், நகைச்சுவை என்பவற்றை அடித்தளமாகக் கொண்டு வெளியிடப்பட்ட முதலாவது இதழ் சிரித்திரன் இதழ் ஆகும். இந்த இதழின் வெளியீட்டில் ஆரம்பத்தில் ஒத்துழைத்த நிறுவனங்கள் தனிநபர்கள் பற்றி ஏதேனும் கூறமுடியுமா? என்று அடுத்த கேள்விக்குத் தாவினேன்.

மதம், அல்லது கட்சி நிறுவனங்கள் அல்லது குறுகிய ஒரு வட்டத்தினுள்ளே நின்றுகொண்டு நான் செயற்படவில்லை. எந்தப் பின்னணிப் பலத்தையும் நான் நாடவில்லை. மக்கள்மீது நம்பிக்கை கொண்டு மக்களையே எனது மூலாதாரப் பலமாகக் கொண்டு பத்திரிகையை ஆரம்பித்தேன் எனப் பதிலளித்தார் திரு. சுந்தர் அவர்கள்.

தாங்கள் பத்திரிகை ஆரம்பித்தபோது பத்திரிகைக்காக என்னென்ன நோக்கங்களைக் கொண்டிருந்தீர்கள் என்பது எனது அடுத்த கேள்வியாகியது.

தமிழில் விரச உணர்ச்சிகளைத் தழுவியதாகவே அநேக பத்திரிகைகள் தென்பட்டன. ஒரு குடும்பத்தின் உறுப்பினர்கள் அனைவரும் ஒரே முறையிலமர்ந்து எந்தவிதமான சங்கடங்களும் இன்றி வாசிக்கக்கூடியதாக பத்திரிகையை அமைக்க வேண்டும் என்பதுவே முதல் நோக்கமாகியது.

அடுத்ததாக அரசியல், மதம் என்ற எல்லைகளுக்கப்பால் ஆரோக்கியமான சமுதாயம் ஒன்றை உருவாக்கும் இலட்சியம் மனத்தின் அடித்தளத்தில் இருந்தது என்றார் அவர்.

சுமார் இருபத்தைந்து வருடகாலத்திற்கும் மேலாகப் பத்திரிகையை வெளியிட்டுவரும் தாங்கள் பத்திரிகை மூலமாக சாதித்த விடயம் என்ன என்பதை விளக்குவீர்களா? என்றேன் நான்.

எந்தப் பணமும் பெற்றுக் கொள்ளாமலேயே சிரித்திரன் பிரதிகளை கொடுத்தனுப்பிவேன் எனக் குறிப்பிட்டார்.

மேலும் ஒரு தடவை கொழும்பிலிருந்து ரயில் மூலம் யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்தேன். அப்போது சிரித்திரன் இதழ் ஒன்றை எடுத்து படித்துக் கொண்டிருந்தேன் பக்கத்திலிருந்து வந்த ஒருவர் சிறிது நேரம் என்னையே உற்



''ஒரு குடும்பத்தின் உறுப்பினர்கள் அனைவரும் ஒரே முறையிலமர்ந்து எந்த விதமான சங்கடங்களும் இன்றி வாசிக்கக் கூடியதாக பத்திரிகையை அமைக்க வேண்டும் என்பதுவே என் முதல் நோக்கம்.''

-- சிரித்திரன் சுந்தர்

தரமான ஒரு சஞ்சிகை வெளியிடப்பட்டால் அதன் வெற்றிக்குத் தேவையான வாய்ப்பும் களமும் இருக்குண்டு என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறேன் என்றார் பெருமிதத்துடன்.

பத்திரிகை வெளியீட்டுத் துறையில் உங்கள் சகதர்மிணியாரின் ஒத்துழைப்பு குறித்து ஏதாவது சொல்ல முடியுமா? என்றொரு வினாவைத் தொடுத்தேன்.

அவர் எனக்கு ஒரு சகல சோக நிவாரணி எனக் கூறியவர் எப்போதும் என் சக (+) தர்மிணியாகவே இருக்கிறார்: ஒரு போதும் சய (—) தர்மிணியாக இருக்கவில்லை எனத் தமக்கேயுரித்தான பாணியில் பதில் அளித்தார்.

உங்கள் தூரிகையால் சாதிக்க முயன்றது என்ன என்ற அடுத்த கேள்விக்கு தாவினேன்.

சமூகக் குப்பையை கூட்டித் தள்ளுவதில் ஒரு நகரசுத்தி தொழிலாளியின் துடைப்பம் போல எனது தூரிகையை பயன்படுத்த நான் முயன்றிருக்கிறேன் என்றார் சுந்தர் அவர்கள்.

ருப்பார்த்துவிட்டுசஞ்சிகையை வாசிக்கக் கேட்டார். இவர் ஓசியில் புத்தகம் படிக்க நினைக்கிறாரே என்று சிந்தித்த போதும் புத்தகத்தை கொடுத்தேன். சில கணங்களுக்கு புத்தகத்தை உற்றுப் பார்த்தவர்பின்னர்என்னைத்திரும்பி எனது மூக்குக்கண்ணாடியையும் தரும்படி கேட்டார். கொடுத்தேன் வலு மும்முரமாக புத்தகத்தை வாசிப்பது போலபாவனை பண்ணிக் கொண்டிருந்தார்அப்போதுகோப்பி கோப்பி எனக் கூவிக்கொண்டு வந்தவரை நோக்கி இரண்டு கப் கோப்பி தாருங்கள் என்றேன் எனது பக்கத்திலிருந்த நண்பர் என்னை திரும்பி பார்த்தார். உங்களுக்காகத்தான் மேலதிக ஒரு கப் கோப்பி எனக் கூறினேன். நிதானமாக கையைநீட்டி கோப்பியை வாங்கியபடியே அவர் மீண்டும் சஞ்சிகையில் மூழ்கினார். நான் இரண்டு கப் கோப்பிக்கும் காசைக் கொடுத்து விட்டு ரயிலின் ஜன்னலுக்கு வெளியே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

தற்போது கருத்துப்படங்கள் வரைவதில் ஆர்வமுடன்

> தமிழீழ தேசியத்தை நிலைநாட்டும் போராட்டத்தின் ஒரு கட்டமாக தமிழீழ தேசிய விருது அறிவிக்கப்பட்டது. முதன் முறையாக தமிழீழ தேசிய விருது வழங்கி மாமனிதர் எனக் கௌரவிக்கப்பட்டவர்களில் ஒருவரான திரு. சிவஞானசுந்தரம் அவர்களுடனான உரையாடலிலிருந்து கிரகித்துக்கொண்ட விடயங்களை இங்கே காணலாம்.

உங்கள் வாழ்விலேற்பட்ட மறக்க முடியாத இரண்டொரு சம்பவங்களைக் கூற முடியுமா? என்பது என் அடுத்த கேள்வியாகியது.

வித்துவான் வேலன் அவர்களின் மருமகன் ஒரு சமயம் எனது வீட்டிற்கு வந்திருந்தார். சிரித்திரன் சஞ்சிகையின் பழைய பிரதிகள் இருந்தால் தாருங்கள் என்ன விலையாயினும் தருகிறேன் எனக் கேட்டார். எதற்காக கேட்கிறீர்கள் என வினாவினேன். அப்போது தன் ட்ரினிட்டிக் கல்லூரியின் மாணவனாகவும் கிரிக்கட் வீரனாகவும் இருந்த ஒருவர் கொழும்பு ரயிலில்கோண்சிற் பிடிக்கும் முயற்சியில் தனது ஒரு காலை இழக்க நேரிட்டமை பற்றி விளக்கிய அவர் துன்பம் தோய்ந்த நிலையிலும் படித்து மகிழ்ந்திருக்க சிரித்திரன் இதழ் பிரதிகள் வாங்கித்தரும்படி கேட்டதாக கூறினார்: மனம் நெகிழ்ந்த நான்

ஈடுபடும் இளைய தலைமுறையினருக்கு தாங்கள் கூறக்கூடிய அறிவுரை என்னவாக இருக்கும்? என்றொரு வினாவைத் தொடுத்தேன்.

ஆர்வமுடன் சலிப்படையாமல் தொடரப்பட வேண்டும் அதற்கு ஊடாக தத்தமக்கென ஒரு பாணியை வளர்த்தெடுக்க வேண்டும். அதுதான் ஆரோக்கியமாக அமையும். எனப் பதிலளித்தார் அவர்.

இறுதியாக ஒரு கேள்வி என்ற பீடிகையுடன் நான் சுமார் இருபது வருடங்களுக்கு முன்பு தமிழீழமே தமிழர்களுக்கான அரசியல் தீர்வு என்றும் ஆயுதம் தாங்கிய போராட்டம் என்றும் பேசப்பட்ட போது உங்கள் தலைமுறையைச் சார்ந்த பலரும் கற்பனை செய்து பார்க்கக்கூடத் தயங்கி இருப்பீர்கள் போராட்டத்தின் இன்றைய நிலை அல்லது வளர்ச்சி பற்றி தாங்கள் என்ன கருதுகிறீர்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிறுபான்மையோர் பிரச்சினையை அரசியல்கட்சிகள் அனைத்தும் தமதுநலனுக்குபயன்படுத்தின

-ஏ.சி. எஸ். ஹமீத்

(கொழும்பு)

இலங்கையின் சிறுபான்மையினரின் பிரச்சினையை பிரதான அரசியல் கட்சிகள் அனைத்தும் தமது அரசியல் நலன்களுக்காக பயன்படுத்திக் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மகாஜன எக்ஸத் பெரமுன ஆகிய எல்லாக் கட்சியினருமே இந்தக்குற்றத்தைச் செய்துள்ளார்கள் என்று அமைச்சர் ஏ. சி எஸ் ஹமீத் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாமும் (யூ என். பி.) குற்றவாளிகள் தாம் 1956 இல மொழிப் பிரச்சினையில் சம அந்தஸ்தை ஆதரித்த நாம் களனி மாநாட்டில் எமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டோம் இதன் விளைவாக பாராளுமன்றத்தில் எமது எண்ணிக்கை எட்டாகக் குறைந்தது 1960 ஜூலை மாதத்தில் தமிழர் விரோதக் கொள்கையைப் பின்பற்றினோம் பாராளுமன்றத்தில் எமதுபலம் 50ல் இருந்து 18ஆகக் குறைந்தது. இதனால் நல்ல தொரு பாடத்தினையும் படித்துக் கொண்டோம் என்று அவர் தொடர்ந்து பேசினார்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் சமூகங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்தும் வகையில் வாக்களித்தார்களா?

1965ல் தமிழ்மொழி விசேட திருத்தச் சட்டத்தை ஆதரித்தார்களா? காலஞ்சென்ற பண்டாரநாயக்காவேமொழிப் பிரச்சினைக்கு வித்திட்டார். யாழ் பொதுசன நூல் நிலையத்தை நாம் எரித்ததாக எம் மீது குற்றம் சாட்டுகிறார்கள் சமூகங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்தக் கூடிய ஏதாவது ஒரு சட்டமூலத்தை சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்றத்தில் ஆதரித்ததுண்டா? என்றார் அவர்

## உள்ளூராட்சிஉறுப்பினர்க்கு மாதாந்தப்படிவழங்கப்படும்

(கொழும்பு)

சிறிலங்காவில் கடந்த மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் பிரதித்தலைவர்கள் அங்கத்தவர்கள் ஆகியோருக்கு அரசாங்க நிதியுதவியாக மாதாந்தப் படியொன்று வழங்கப்படவுள்ளது

இந்த நிதி மாகாணசபைகள் மூலம் வழங்கப்படும் என்றும் இதன்படி மாநகர முதல்வர் 7500 ரூபாவினையும் பிரதிமுதல்வர் 5000 ரூபாவினையும், அங்கத்தவர்கள் 3500ரூபாவினையும் பெறுவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

பிரதேசசபை, நகர சபை ஆகியவற்றின் தலைவர்களுக்கு 4000 ரூபாவும் உப தலைவர்களுக்கு 2000 ரூபாவும் அங்கத்தவர்களுக்கு 1500 ரூபாவும் வழங்கப்படவிருக்கிறது,

அத்துடன் அடுத்த மாதம் 1ஆம் திகதியிலிருந்து உள்ளூராட்சி சபைகள் செயற்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிவராஜனை கண்டுபிடிக்க சென்னையில் போஸ்டர்

(டில்லி)

ராஜீவ் காந்தியின் படுகொலை தொடர்பாகத் தேடப்பட்டு வருபவரைக் கண்டுபிடிக்க உதவுமாறு பொதுமக்களுக்கு இந்திய பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவுத் தலைவரான சிவராஜன் என்பவரை தேடுவதாக இந்திய பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

சிவராஜன் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட இடத்துக்கு அருகில் காணப்பட்டார். அவருடைய கண் ஒன்று பொய்க்கண் எனத் தெரிவிக்கப்படும் அதேவேளை அவரின் படம் சென்னை நகரின் முக்கிய இடங்களெங்கும் ஒட்டப்பட்டிருக்கிறது.

## காங்கிரஸ் வெற்றி

(டில்லி)

கேரள மாநிலத்திலும், ஹரியானாவிலும் இந்திரா காங்கிரஸ் சட்டசபைத் தேர்தலிலும் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுள்ளது

## புதிய துணைவேந்தருக்கு மூன்று பெயர்கள் சிபார்சு

(நல்லூர்)

யாழ். பல்கலைக்கழக தற்போதைய உபவேந்தரின் பதவிக்காலம் வரும் ஆகஸ்ட் மாதத்துடன் முடிவடைகிறது இவ் வெற்றிடத்தை நிரப்புவதற்கு பெயர்களைச் சிபார்சு செய்யுமாறு பல்கலைக்கழக மானியக் குழு பல்கலைக்கழகத்தைக் கோரியிருந்தது

பல்கலைக்கழகப் பேரவை தற்போதைய உபவேந்தர் பேராசிரியர் துரைராசா முன்னாள் மருத்துவ பீடப் பீடாதிபதி பேராசிரியர் சிவஞானசுந்தரம் கலைப் பீடாதிபதி பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை ஆகியோரின் பெயர்களை அனுப்பிவைத்துள்ளது.

## காங்கிரஸ்

வப் போவதாக அறிவித்துள்ள அதேவேளை, ஜனதா தளத்திலும் ஒரு பகுதியினர் காங்கிரஸ் கட்சி ஆட்சியமைக்க உதவுவதற்குத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை காங்கிரஸ் கட்சி புதிய ஆட்சியை அமைக்கும் பட்சத்தில் பிரதமராக யாரைத் தெரிவு செய்வது என காங்கிரஸ் கட்சி வட்டாரங்களில் தீவிரமாக ஆலோசிக்கப்படுகின்றது.

இதில் தற்போதைய தலைவர் நரசிம்மராவிற்கே வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாக அவதானிகள் கருதுகின்றார்கள் எம் ரி திவாரி, சரத் பவர் ஆகியோருடைய பெயர்கள் பிரதமர் பதவிக்கு அடிபடினும் உத்தரப் பிரதேசத்தில் காங்கிரஸ் மூன்றாம் நிலைக்குத் தள்ளபட்டமையும் சரத்பாவரில் பெரும்பான்மை ராஜீவ் காந்தி விசுவாசிகளுக்கு விருப்பமில்லாமையாலும் கட்சியில் பிளவு ஏற்படும் என்ற அச்சத்தாலும நரசிம்மராவே அடுத்த பிரதமர வரைப்படுவர் விரும்புவதாகத் தெரியவருகின்றது.

நரசிம்மராவ் பிரதமராக தெரிந்தெடுக்கப்பட்டால் இந்தியாவில் பிரதமராகும் முதலாவது தென்னிந்தியர் என்ற பெருமை அவருக்கு கிடைக்கும்

## வெள்ளோட்ட விழா

(யாழ்ப்பாணம்)

மூளாய் வரதன்புலோ சித்திவினாயகர், முத்துக்குமார சுவாமி தேர்த்திருப்பணிச்சபையினரால் சிறந்த கலை அம்சங்களுடன் நிர்மாணிக்கப் பட்ட சித்திரத்தேரின் வெள்ளோட்ட விழா எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

ஒத்திவைக்கப்பட்ட சித்தி வினாயகர் ஆலையத்தின் மஹோற்சவம் தற்பொழுது ஆரம்பமாகியுள்ளது. இம் தேர்த்திருவிழாவின் போது மேற்படி புதிய சித்திரத்தேரில் சித்திவினாயகர் பவனி வருவார்.

## புவியியற் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புவியியல் கழகத்தினரால் வடமாகாண எதிர்கால அபிவிருத்தியில் இயற்கை வளங்களின் பங்களிப்பு என்னும் தலைப்பில் கருத்தரங்கு ஒன்று நாளை பிற்பகல் 3 00 மணிக்கு பல்கலைக்கழக புவியியற் துறை விரிவுரை மண்டபத்தில் நடாத்தப்படவுள்ளது இக் கருத்தரங்கில் பொறியியற் துறைத் தலைவர்பேராசிரியர் வீரநவரத்தினராசா மேற்படி தலைப்பிலான உரையை நிகழ்த்துவார்.

## பிராமனா

கள் வருமாறு:

கப்டன் வீரன் (கணபதிப் பிள்ளை குமார், அரிப்பு முருங்கன்) லெப். நகுலேஸ் (காளிமுத்து கந்தசாமி, புளியங்குளம் மன்னார்) லெப் செல்வம் (தர்மதாஸ் நிமலதாஸ் பருத்தித்துறை முனை) லெப், கபில் (மகேஸ்வரலிங்கம் சசிகரன் ஏழாலை தெற்கு சுன்னாகம்) லெப் ஜெறட் (சரவணமுத்து சிறிஸ்கந்தராசா உசன மிருசுவில்) 2-ம் லெப். ரவி நடராஜா கணேஸ் அரசடி வீதி, காங்கேசன்துறை) மேஜர் லெப் நிசாந்தன் மாணிக்கராஜா ஜெயராஜ சங்கத்தானை சாவகச்சேரி) யூதி (இராஜசேகரன். டியூக் 3ஆம் குறுக்குத்தெரு. குருநகர்படுத்தின் ஆறுமுகம் சித்திரவேல் (மாணிக்கத்திடல். மன்னார்) வல்லவன் கதிர்காமத்தம்பி ரவி, பனங்கட்டிக்கொட்டு, மன்னார்) ஜிங்லி (பா. ஜெயசிங்கம், ஏறாவூர் வீரபத்திரர்கோவில் வீதி, மட்டக்களப்பு) ஜெயதாஸ் (காயமடைந்த போராளிகளைத் தூக்கி வரும்போது வீரமரணமடைந்த தீவிர ஆதரவாளர்.

## இந்தியத் தேர்தல் முடிவுகள் 1991

| | 1991 | 1989 | 1984 |
|---|---|---|---|
| தேர்தல் நடந்த தொகுதிகள் | 512 | — | — |
| அறிவிக்கப்பட்டவை | 364 | 525 | 536 |
| காங்கிரஸ் (ஐ) | 191 | 193 | 408 |
| பாரதீய ஜனதா | 76 | 88 | 02 |
| ஜனதா தளம் | 25 | 141 | — |
| ஜனதா தளம் (எஸ்) | 01 | — | — |
| இந்திய கம்யூனிஸ்ட் | 04 | 12 | 06 |
| சிவசேனை | 05 | — | 22 |
| இ.மாக்சிஸ்ட் | 24 | 01 | — |
| அ தி மு க | 11 | 11 | 11 |
| தெலுங்கு தேசம் | 11 | 02 | 20 |
| ஏனையவை | 19 | 45 | 57 |

## தமிழ்நாடு / புதுவை தேர்தல் முடிவுகள் 1991

| தேர்தல் நடந்த இடங்கள் | தமிழ்நாடு | புதுவை |
|---|---|---|
| அறிவிக்கப்பட்ட முடிவுகள் | 232 | 30 |
| அ. தி. மு க. | 163 | 06 |
| காங்கிரஸ் (ஐ) | 51 | 15 |
| தி. மு. க. | 01 | 04 |
| பாட்டாளி மக்கள் கட்சி | 01 | - |
| இ. கம்யூனிஸ்ட் | 01 | - |
| மா. கம்யூனிஸ்ட் | 01 | - |
| அ தி. மு க. - 2 | 02 | - |
| ஏனையவை | 08 | 05 |

பிந்திக் கிடைத்த முடிவுகளின்படி

## பிராமனாலங்குளம்

தொடர்ந்து நடந்த மோதலின் போதே இச் சம்பவம் இடம்பெற்றது, இம் மோதல் குருக்கலூருக்கும் சின்னத்தம்பனைக்கும் இடையில் இடம் பெற்றது,

பிரமனாலங்குளப் பகுதியில் இருந்து மடுநோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கு துணையாக இரண்டு குண்டு வீச்சு விமானங்களும் இரண்டு உலங்கு வானூர்திகளும் ஒரு பயணிகள் விமானமும் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த வேளையிலேயே இவ் உலங்கு வானூர்தி சுடப்பட்டது,

இம்மோதலை ஊர்ஜிதப் படுத்திய சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் இம் மோதலில் பதினேழு படைகள் கொல்லப்பட்டதாகத் தெரிவித்த அதேவேளை தொடர்ச்சியாக நடந்த மூன்றுநாள் மோதலில் 23 இராணுவத்தினர் கொல்லப் பட்டதாகவும் 60க்கு மேற்பட்ட இராணுவத்தினர் படுகாயம் அடைந்ததாகவும் தெரிவித்தது,

அம்மோதலின கீழ்வரும் ஆயுதங்கள் புலிகளால் மீட்கப்பட்டன.

- ★ ரி-56-1 ரக துப்பாக்கி - 01
- ★ ரி 56 II ரக துப்பாக்கி - 01
- ★ 203 பிஸ்ரல் - 01
- ★ ஷெல் - 06

## இராணுவம்

ஏழுமணி தொடக்கம் 9 30 மணிவரை வவுனிபாசெட்டிப் புலவில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தின் மீது முகாமில் இருந்து அரை மைல் தூரத்தில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர்

இத் தாக்குதலால் இராணுவத் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. சேத எண்ணிக்கை விபரம் கிடைக்கவில்லை

## எழுச்சிப் பேரணி

இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராக வலிகாமம் மக்களின் எழுச்சிப் பேரணி நளைபுதன் கிழமை காலை 9 மணியளவில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய முன்றலிலிருந்து ஆரம்பமாகும் ஊர்வலம் யாழ். அரசாங்க அதிபர் செயலகத்தைச் சென்றடையும்.

## தமிலக

முக்கு 30, 450 வாக்குகளும் கிடைத்தன.

காங்கேயத்திலும் இவரே வெற்றி பெற்றுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் 69, 050 வாக்குகளைப் பெற்றுள்ளார்.

## குண்டுவீச்சின்

தலின் மத்தியில் மடுப்பகுதியை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் முன்னேற முயல்கின்றனர்

இராணுவத்தினரை எதிர்த்து விடுதலைப் புலிகள் கடும் எதிர்த் தாக்குதல் மேற்கொண்டு வருவதாகவும் இராணுவத் தரப்பில பலத்த சேதம் ஏற்பட்டதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன,

## புலிகளின்

- ★ அதற்நவீய ரவைக் கூடுகள் - 04
- ★ நடுத்தர ரவைகள் - 400
- ★ ஜே ஆர். கைக்குண்டுகள் -04

ஆகிய ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

## இன்று ஆசிரியர்

பலாலி வீதியூடாக யாழ்நகரை அடைந்து அங்கிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகம். யாழ் அரச அதிபர் அலுவலகம்,கல்விப்பணிப்பாளர் அலுவலகம் ஆகியவற்றிற்குச் சென்று மகஜர்களைக் கையளிக்கும்,

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்தில் உள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.